மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தொழிற்சாலைகள் உட்படத் தொழிலாளர் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கை, வீட்டு வசதி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட அரசுக் கொள்கை விளக்கக் குறிப்புகள் * அச்சிடப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. இந்த மானியத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை வரவேற்று பின் அக்கருத்துக்களுக்கு விளக்க மாக பதில் கூறலாம் என்பதால் உங்கள் கருத்துக்களை வரவேற்கிறேன். ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்கிற இந்த விளக்க நூல்களினுடைய கருத்துக் களையெல்லாம் குறிப்புக்களிலே சேர்த்துக்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

(4) அமைச்சரின் அறிக்கைகள்—தொடர்ச்சி.

(ஆ) மின்வெட்டு குறித்து மாண்புமிகு தொழில்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தொழில்துறை அமைச்சரவர்கள் 83-வது விதியின்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள். அதுபற்றி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களும் பேரவையின் 42-வது விதியின்கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள்

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இப்போது தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் ஆகியவை பயன்படுத்தும் மின்சா ரத்தில் 60 சதவித வெட்டும், இன்றியமையாதத் துறைகள் பயன்படுத்தும் மின்சாரத்தில் 25 சதவித வெட்டும் செயலில் உள்ளது. இந்த அடிப்படையில் அன்றாடமின்சாரத் தேவை 180 லட்சம் யூனிட்டுகள் அளவில் இருக்குமென்றும், இந்தத் தேவையை நெய்வேலியிலிருந்து 60, 70 லட்சம் யூனிட்டுகள் பெறுவதன் மூலமும், மின்வாரியத்திற்குச் சொந்தமாக அனல் மின்நிலையங்களிலிருந்து 40, 50 லட்சம் யூனிட்டுகள் பெறுவதன் மூலமும், எஞ்சிய தேவையை புனல் மின் நிலையங்களிலிருந்து பெறுவதன் மூலமும், கேரளாவிலிருந்து ஓரளவிற்கு மின்சக்தியைப் பெறுவதன் மூலமும் சமாளித்துவிடலாம் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆயினும் முக்கியமாக விவசாய மின்சாரத் தேவை அதிகரித்ததனால், மின்சாரம் பயன்படுத்தும் அளவு நாளொன்றுக்கு 190 லட்சம் முதல் 200 லட்சம் யூனிட்டுகள் வரையில் பெருகியது. நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தின் அளவு ஓரளவு குறைவாகவே இருந்தது. அனல் மின் உற்பத்தி

* 252 309 பக்கங்களில் இணைப்புகள் I, II and III ஆக அச்சிடப்பட்டுள்ளன.